தினமலர் சென்னை ஞாயிறு 28-6-2009

# போதைப் பொருள் பயன்படுத்துவோர் குடும்பம் தற்கொலை அதிகரிப்பு

சென்னை, ஜூன் 28-

'போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோரும், அவர்களின் குடும்பங்களிலும் தற்கொலைச் சம்பவங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன' என, போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.

உலக போதைப் பொருள் பயன்பாடு எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில், பல்கலையின் துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.ரங்கசாமி, பல்கலையின் பலதுறை தலைவர் பேராசிரியர் வி.சோமசுந்தரம், மன நலத்துறைத் தலைவர் பேராசிரியர் ஆர்.பொன்னுதுரை மற்றும் கீழ்ப்பாக்கத்தின் மனநலத்துறை இன்ஸ்டிடியூட்டின் முன்னாள் கண்காணிப்பாளர் பேராசிரியர் ஓ.சோமசுந்தரம் மற்றும் முன்னாள் இயக்குனர் பேராசிரியர் பி.பாஷியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புகையிலைப் பொருட்கள் மீது செய்யப்படும் தடுப்பு எச்சரிக்கைகள் எந்த அளவு பயனளிக்கின்றன என்பது பற்றி மாணவர்களின் பட்டிமன்றமும் நடந்தது.